ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# திருமங்கையாழ்வார் அருளிச்செய்த பெரிய திருமொழி

# 10.6 – எங்கானும்

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness  śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# 10.6 – எங்கானும்

‡ எங்கானும் ஈதொப்பதோர் மாயம் உண்டே ⋆
நர நாரணனாய் உலகத்தற நூல் ⋆
சிங்காமை விரித்தவன் எம் பெருமான் ⋆
அது அன்றியும் செஞ்சுடரும் நிலனும் ⋆
பொங்கார் கடலும் பொருப்பும் நெருப்பும் நெருக்கிப் புக ⋆
பொன் மிடறத்தனை போது ⋆
அங்காந்தவன் காண்மின் இன்றாய்ச்சியரால் ⋆
அளை வெண்ணெய் உண்டாப்புண்டிருந்தவனே ‖ **10.6.1** ‖

குன்றொன்று மத்தா அரவம் அளவிக் ⋆
குரை மா கடலைக் கடைந்திட்டு ⋆
ஒரு கால் நின்றுண்டை கொண்டோட்டி வன் கூன் நிமிர ⋆
நினைத்த பெருமான் அது அன்றியும் முன் ⋆
நன்றுண்ட தொல் சீர் மகரக் கடல் ஏழ் ⋆
மலை ஏழ் உலகேழ் ஒழியாமை நம்பி ⋆
அன்றுண்டவன் காண்மின் இன்றாய்ச்சியரால் ⋆
அளை வெண்ணெய் உண்டாப்புண்டிருந்தவனே ‖ **10.6.2** ‖

உளைந்திட்டெழுந்த மது கைடவர்கள் ⋆
உலப்பில் வலியார் அவர் பால் ⋆
வயிரம் விளைந்திட்டதென்றெண்ணி விண்ணோர் பரவ ⋆
அவர் நாள் ஒழித்த பெருமான் முன நாள் ⋆
வளைந்திட்ட வில்லாளி வல் வாள் எயிற்று ⋆

மலை போல் அவுணன் உடல் வள் உகிரால் ⋆
அளைந்திட்டவன் காண்மின் இன்றாய்ச்சியரால் ⋆
அளை வெண்ணெய் உண்டாப்புண்டிருந்தவனே ॥ **10.6.3** ॥

தளர்ந்திட்டிமையோர் சரண் தா எனத் ⋆
தான் சரணாய் முரண் ஆயவனை ⋆
உகிரால் பிளந்திட்டமரர்க்கருள் செய்துகந்த ⋆
பெருமான் திருமால் விரி நீர் உலகை ⋆
வளர்ந்திட்ட தொல் சீர் விறல் மாவலியை ⋆
மண் கொள்ள வஞ்சித்தொரு மாண் குறளாய் ⋆
அளந்திட்டவன் காண்மின் இன்றாய்ச்சியரால் ⋆
அளை வெண்ணெய் உண்டாப்புண்டிருந்தவனே ॥ **10.6.4** ॥

நீண்டான் குறளாய் நெடு வான் அளவும் ⋆
அடியார் படும் ஆழ் துயர் ஆய எல்லாம் ⋆
தீண்டாமை நினைந்திமையோர் அளவும் ⋆
செல வைத்த பிரான் அது அன்றியும் முன் ⋆
வேண்டாமை நமன் தமர் என் தமரை ⋆
வினவப் பெறுவார் அலர் என்று ⋆
உலகேழ் ஆண்டான் அவன் காண்மின் இன்றாய்ச்சியரால் ⋆
அளை வெண்ணெய் உண்டாப்புண்டிருந்தவனே ॥ **10.6.5** ॥

பழித்திட்ட இன்பப் பயன் பற்றறுத்துப் ⋆
பணிந்தேத்த வல்லார் துயர் ஆய எல்லாம் ⋆
ஒழித்திட்டவரைத் தனக்காக்க வல்ல ⋆
பெருமான் திருமால் அது அன்றியும் முன் ⋆
தெழித்திட்டெழுந்தே எதிர் நின்று மன்னன் ⋆
சினத்தோள் அவை ஆயிரமும் ⋆

மழுவால் அழித்திட்டவன் காண்மின் இன்றாய்ச்சியரால்⋆
அளை வெண்ணெய் உண்டாப்புண்டிருந்தவனே ॥ **10.6.6** ॥

படைத்திட்டதிவ்வையம் உய்ய முன நாள்⋆
பணிந்தேத்த வல்லார் துயர் ஆய எல்லாம்⋆
துடைத்திட்டவரைத் தனக்காக்க வென்னத்⋆
தெளியா அரக்கர் திறல் போய் அவிய⋆
மிடைத்திட்டெழுந்த குரங்கைப் படையா⋆
விலங்கல் புகப் பாய்ச்சி விம்ம⋆
கடலை அடைத்திட்டவன் காண்மின் இன்றாய்ச்சியரால்⋆
அளை வெண்ணெய் உண்டாப்புண்டிருந்தவனே ॥ **10.6.7** ॥

நெறித்திட்ட மென் கூழை நல் நேர் இழையோடு⋆
உடனாய வில் என்ன வல் ஏய் அதனை⋆
இறுத்திட்டவள் இன்பம் அன்போடணைந்திட்டு⋆
இளங்கொற்றவனாய்த் துளங்காத முந்நீர்⋆
செறித்திட்டிலங்கை மலங்க அரக்கன்⋆
செழு நீள் முடி தோளொடு தாள் துணிய⋆
அறுத்திட்டவன் காண்மின் இன்றாய்ச்சியரால்⋆
அளை வெண்ணெய் உண்டாப்புண்டிருந்தவனே ॥ **10.6.8** ॥

சுரிந்திட்ட செங்கேழ் உளைப் பொங்கரிமாத்⋆
தொலையப் பிரியாது சென்றெய்தி⋆
எய்தாது இரிந்திட்டிடங்கொண்டடங்காத தன் வாய்⋆
இரு கூறு செய்த பெருமான் முன நாள்⋆
வரிந்திட்ட வில்லால் மரம் ஏழும் எய்து⋆
மலை போல் உருவத்தொர் இராக்கதி மூக்கு⋆

அரிந்திட்டவன் காண்மின் இன்றாய்ச்சியரால் ⋆
அளை வெண்ணெய் உண்டாப்புண்டிருந்தவனே ॥ **10.6.9** ॥

‡ நின்றார் முகப்புச் சிறிதும் நினையான் ⋆
வயிற்றை நிறைப்பான் உறிப்பால் தயிர் நெய் ⋆
அன்றாய்ச்சியர் வெண்ணெய் விழுங்கி ⋆
உரலோடாப்புண்டிருந்த பெருமான் அடி மேல் ⋆
நன்றாய தொல் சீர் வயல் மங்கையர் கோன் ⋆
கலியன் ஒலி செய் தமிழ் மாலை வல்லார் ⋆
என்றானும் எய்தார் இடர் இன்பம் எய்தி ⋆
இமையோர்க்கும் அப்பால் செல எய்துவாரே ॥ **10.6.10** ॥

அடிவரவு — எங்கானும் குன்று உளைந்து தளர்ந்து நீண்டான் பழித்திட்ட படை நெறி சுரி நின்றார் மானம்

எங்கானும் முற்றிற்று

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்